ரஷ்யா, பிரேசில், சீனா பொருளாதாரத்தில் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குகிறது

# இந்தியா அனைத்து பண்பாடும் ஓங்கி வளர்ந்த நாடாக உள்ளது

## பிரிக்ஸ் ஜெனரேசன் அமைப்பின் 2 வது ஆண்டு ஆலோசனைக் கூட்டத்தில் 'ஜெம்' வீரமணி பேச்சு




சென்னை, ஆக. 7–

பிரிக்ஸ் ஜெனரேசன் அமைப்பின் ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய தொழிலதிபர் ஜெம். வீரமணி, இந்தியா அனைத்துப் பண்பாடுகளும் ஓங்கி வளர்ந்த நாடாக உள்ளது என்று, பெருமிதத்துடன் கூறினார்.

பிரிக்ஸ் ஜெனரேசன் அமைப்பின் 2 வது ஆண்டு ஆலோசனைக் கூட்டம், ரஷ்ய கலாச்சார மையத்தில் நடைபெற்றது. இந்த விழாவில், அமைப்பின் தலைவர் ஆர்.முத்துக்குமார் வரவேற்புரை ஆற்றினார். பிரிக்ஸ் ஜெனரேசன் நிர்வாகிகள், எழுத்தாளர் உமா, தொழிலதிபர் சுந்தர வடிவேல், அண்ணா பல்கலைக்கழக பேராசியர் டாக்டர் ஆசாத், தொழிலதிபர் சுனில் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும், ஐ கிராண்டீ நிறுவனர் மோகன், எஸ்எஸ்என் கல்லூரி முதல்வர் சாலிவாகனன், விஜயசாரதி ஆகியோர் பங்கேற்ற கூட்டத்தில், சிறப்பு விருந்தினராக, தொழில் அதிபர் ஜெம் வீரமணி கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:–

பிரிக்ஸ் அமைப்பில், பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்ஆப்பிரிக்கா ஆகிய நாடுகள் உள்ளன. இதில், உலகில் உள்ள 3 கண்டங்களை உள்ளடக்கிய நாடுகள் இணைந்துள்ளன. இதில் உலக மக்கள் தொகையில் 40 சதவீதத்தினர் வாழ்கின்றனர். இந்த 5 நாடுகளும் இணைந்து ஏற்படுத்தியுள்ள அமைப்பானது, பல்வேறு வளர்ச்சி நிலைகளை முன்னெடுக்க ஆலோசித்து வருகின்றது. அதனையொட்டி, ஏற்படுத்தப்பட்டுள்ள "பிரிக்ஸ் ஜெனரேசன்" என்ற அமைப்பின் மூளையாகவும், உந்து சக்தியாகவும் மக்கள் குரல் ஆசிரியர் ஆர். முத்துக்குமார் விளங்குகிறார். இந்த அமைப்பில், இளைஞர்கள், மாணவர்கள், பேராசிரியர்கள், தொழில் அதிபர்கள் என பலரும் இணைந்துள்ளது வரவேற்கத்தக்கது. இது போன்ற புதிய அமைப்புகள், நாட்டின் வளர்ச்சிக்கு புதிய பார்வையை வழங்கும்.

பிரிக்ஸ் அமைப்பில் உள்ள, தென் அமெரிக்கா, பிரேசில், ரஷ்யா உள்ளிட்ட அனைத்து நாடுகளுக்கும் நான் பலமுறை சென்று வந்துள்ளேன். இந்தியாவில் காபி, பெட்ரோல், சர்க்கரை போன்றவற்றின் விலை உயர்ந்தாலும், தாழ்ந்தாலும், அதற்கு காரணமாக உள்ள நாடாக பிரேசில் உள்ளது. அதேபோல் பிரேசில் நாட்டில் உள்ள பிரையா டோ காசினோ கடற்கரை உலகின் மிக நீளமான கடற்கரையாக உள்ளது. அதேபோல் சென்னையிலுள்ள நமது மெரினா கடற்கரை 2 வது பெரிய கடற்கரையாக உள்ளது. உயிரி எரிபொருள் (BIO FUEL) பயன்பாட்டில் உலகிலேயே பிரேசில் முதல் இடத்தில் உள்ளது. 2050 ஆம் ஆண்டுக்குள் 100 சதவீதம் உயிரி எரிபொருள் மட்டுமே பயன்படுத்துவது என்று அந்நாடு திட்டமிட்டுள்ளது.

அதேபோல், ரஷ்யா மிகவும் வளமான நாடு. தங்கம் உள்ளிட்ட கனிம வளங்கள் நிறைந்த நாடு. செயற்கைகோளை முதலில் அனுப்பிய நாடு. அதேபோல், சீனா மிகப் பழமையான நாகரீகம் உள்ள நாடு. தொழில் நுட்ப வளர்ச்சியில், உலகில் மிகவும் சிறந்து விளங்குகிறது. தென் ஆப்பிரிக்காவிற்கு, நெல்சன் மண்டேலா அழைப்பின் பேரில் 10 நாட்கள் சென்று வந்திருக்கிறேன். நமது நாட்டை, அங்குள்ள மக்கள் மிகவும் மதிக்கக் கூடியவர்கள்.

### தாய்போல் மதிக்க வேண்டும்

இந்தியா பல்வேறு கலாச்சாரம், மதங்கள், மொழி கொண்ட நாடாக, வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட நாடாக விளங்குகிறது. இங்கு, அனைத்து விதமான பண்பாடுகளும் ஓங்கி வளர்ந்து உள்ளது. பொதுவாக, மதங்கள் நம்பிக்கையை அடிப்படையாக கொண்டது. ஒவ்வொரு மதத்தையும், பின்பற்ற அந்தந்த மக்களுக்கு உரிமை உள்ளது. ஒவ்வொருவருக்கும், அவரவர்களுடைய தாய் முக்கியமானவர். அந்த உண்மையையும், உரிமையையும் நாமும் மதிக்க வேண்டும். அனைத்து தாயையும் மதிப்பது போல், மற்றவர்களின் மதம், நம்பிக்கைகளை நாம் மதிக்க கற்றுக்கொள்ள வேண்டும் என்பதே எனது தாழ்மையான கருத்து. இவ்வாறு ஜெம். வீரமணி பேசினார்.

### மினி ஒலிம்பிக்

முன்னதாக, பிரிக்ஸ் ஜெனரேசன் அமைப்பின் தலைவரும், மக்கள் குரல், டிரினிட்டி மிரர் நாளிதழ்களின் ஆசிரியருமான முத்துக்குமார் வரவேற்று பேசும்போது,

பிரிக்ஸ் ஜெனரேசன் போன்ற அமைப்புகள் தொடங்க காரணமாக இருந்தவர் ஜெம் ஆர். வீரமணி. டெல்லி போன்ற இடங்களில் மட்டுமே, பல்வேறு வெளிநாட்டு நடவடிக்கைகள் தொடர்பான முடிவுகளுக்கான பல்வேறு அமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. சென்னையிலும் அதுபோன்ற புதிய அமைப்புகள் ஏற்படுத்த வேண்டும் முன்னெடுப்பின் காரணமாக ஏற்படுத்தப்பட்டதே பிரிக்ஸ் ஜெனரேசன் அமைப்பு.

பிரிக்ஸ் நாடுகள் சார்பில், புதிய வங்கி, பல்கலைக்கழகம் என்று பரந்துபட்ட செயல்திட்டங்கள் செயல்படுத்த திட்டமிட்டு செயலாற்றி வருகிறார்கள். அதேபோல், பிரிக்ஸ் நாடுகள் சார்பில், மினி ஒலிம்பிக் போட்டி நடத்த முன்வர வேண்டும். அது, இந்த அமைப்பில் உள்ள நாடுகளில் உள்ள இளைஞர்களுக்கு பெரிதும், ஊக்கமாகவும் துணை



விஜயசாரதி பேசுகிறார்.

யாகவும் இருக்கும் என்று கூறினார்.

### அறிவியல் முன்னெடுப்புகள்

இந்த விழாவில், ஐ–கிராண்டீ அமைப்பின் தலைவர் மோகன், அவருடைய நிறுவனம் சார்பாக, தென் ஆப்பிரிக்க உயர் கல்வி நிலையங்களில் கணினி வழியாக செயல்படுத்தி வரும், மெய்நிகர் தொலைநிலைக் கல்வி (virtual tele education) பற்றி, திரைக்காட்சி படங்கள் மூலம் விளக்கமளித்தார். விஜய சாரதி, தென் ஆப்பிரிக்காவில் உள்ள வளர்ச்சி பற்றி கூறியதுடன், மருந்து உற்பத்தி துறையில் இந்தியா, உலகின் 3 வது இடத்தில் இருக்கிறது என்றும் விளக்கி கூறினார்.

### 2050 ல் பிரிக்ஸ் முன்னிலை

அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் ஏ.ஆசாத் பேசும்போது, 2050 ம் ஆண்டுக்குள், ஜீ–6 அமைப்பில் உள்ள வளர்ந்த நாடுகளை விட, பிரிக்ஸ் அமைப்பில் உள்ள நாடுகள், பொருளாதாரத்தில் முன்னணியில் இருக்கும் என்பது குறித்து, பல்வேறு தகவல்களுடன் விளக்கம் அளித்தார்.

இந்த விழாவில், பல்வேறு தொழில் அதிபர்கள், பேராசிரியர்கள், சென்னை புதுக்கல்லூரி மாணவ மாணவியர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### ஐ–கிராண்டீ நிறுவனம்

மதுரையை தலைமையகமாக கொண்டு செயல்படும் ஐ–கிராண்டீ (igrandee) நிறுவனம், 2001 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. மறைந்த முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் கூறியதுபோல், எளிய மக்களிடமும் தொழில் தொழில் நுட்பத்தை எடுத்துச் செல்லும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட இந்த நிறுவனம், மின்னணு நிர்வாகம், மின்னணு தொலைநிலைக்கல்வி, மருத்துவம் (egovernance, tele education, healthcare) உள்ளிட்ட பணிகளில் ஈடுபட்டிருக்கிறது.

மேலும், இது குறித்து விவரித்த நிறுவன தலைவர் மோகன், தென் அமெரிக்க நாடு மிகவும் பொருளாதார ரீதியாக பின்தங்கி உள்ளது. இதனால், அங்கு சிறந்த கல்வி அளிக்க, அங்குள்ள உயர்கல்வி நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு, மின்னணு கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம், மாணவர்களுக்கு மிகச் சிறந்த கல்வி அனுபவம் அளிக்கப்படுகிறது.

இதற்காக, அண்ணா பல்கலைக்கழகம், அமிதி பல்கலைக் கழகம், டெல்லியைச் சேர்ந்த ஆர்மி மருத்துவ அறிவியல் கல்லூரி, பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் போன்ற 10 க்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களோடு ஒப்பந்தம் செய்யப்பட்டு செயல்படுத்தப் படுகிறது.

அதேபோல், மருத்துவ துறையில், இங்குள்ள அப்பல்லோ மருத்துவமனை, போர்ட்டீஸ் மருத்துவமனை, அரவிந்த் கண் மருத்துவமனை, தேவகி மருத்துவமனை உள்ளிட்ட மருத்துவமனைகளுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு, தென் ஆப்பிரிக்காவின் மருத்துவ துறையில் மறுமலர்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் நிறுவனங்களின் நிர்வாகங்கள் மின்னணு முறையில் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது என்றார். மேலும், எங்களைப் பற்றிய விவரங்களை igrandee.com மூலம் அறிந்து கொள்ளலாம் என்றும் கூறினார்.